1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதை ஆராய்ந்து பார்த்து, சரியாக இருக்குமென்ற நிலையில் அது நிறைவேற்றப்படும்.

திருமூர்த்தி அணையிலிருந்து ஏரிகளுக்கு தண்ணீர் விடுதல்.

69—(*வினா எண் 9423)—**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் ஆளியார் பாசனத் திட்டத்தைச் சேர்ந்த திருமூர்த்தி அணையிலிருந்து தெற்கு பகுதியில் உள்ள ஏழு ஏரிகளுக்கு வெயில் காலத்தில் தண்ணீர் திறந்து விட்டு நிரப்புவது உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உண்டு.

(ஆ) ஏழு குளத்தில் இரண்டாவது பாசன காலம் வெயில் காலத்தை ஒட்டி (அதாவது மார்ச் முதல் மே மாதம் முடிய) வருகிறது. இப் பருவத்தில் திருமூர்த்தி அணையில் நீர் இருப்பின் திறந்துவிடப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏழு ஏரிகள் நிறைவேற்றப்படும் திட்டத்தினால், சில குறிப்பிட்ட வசதி படைத்தவர்கள் தான் பயன் பெறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுவும் சில அதிகாரிகளுடன் சேர்ந்து அந்த ஏற்பாடு செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக சில புகார்கள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று தெரிய வந்திருக்கிறது. அரசுக்கு அந்தப் புகார்கள் கிடைக்கப்பெற்றனவா? அப்படியென்றால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? வசதி படைத்தவர்கள் மட்டுமல்லாமல் ஏழை விவசாயிகளுக்கும் அந்தத் தண்ணீர் கிடைக்கக்கூடிய வகையில், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படி புகார் எதுவும் அரசினுடைய கவனத்தில் இல்லை. புகாரை யாரும் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. தவறு இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, கோடிட்டுக் காட்டினால் போதும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற திட்டம் பெரியார் மாவட்டத்தில் கீழ்ப் பவானி அணையிலிருந்து வருகின்ற, மேட்டுப்பாளையம் பகுதி வழியாக, புஞ்சைப் புளியம்பட்டி போன்ற பகுதிகளில் உள்ள குட்டைகளுக்குத் தண்ணீர் விடுகின்ற திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விப் போட்டால் சரியான பதில் சொல்லப்படும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே இத்தகைய அணைக்கட்டுகளை கட்டுகின்ற பணிகள் ஆரம்பிக்கும் காலத்திலேயே எந்தெந்தப் பகுதிகளுக்கு முதல் தவணை தண்ணீர் விடப்படும் என்றும் இரண்டாவது முறை யாருக்கு விடப்படும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், அதன்படி அதிகாரிகள் செயல்படுவதில்லை. குறிப்பாக திருவண்ணாமலையில் சாத்தனூர் அணையைப் பொறுத்தமட்டில் வடகரை தென்கரை ஆட்களுக்கு முறைப்படி தண்ணீர் விடுவதில்லை. ஆகவே ஒரு முறையைப் பின்பற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்மிரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி அந்த அணைக்கட்டுத் திட்டம் ஏற்படுத்திய நேரத்தில் அந்த வரையறை செயல்பட்டதோ அது போன்றுதான் விட்டுக்கொண்டிருக்கிறோம். ஒருசில நேரங்களில் தண்ணீர் பற்றாக்குறையுள்ள பகுதிகளில், உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வருகின்ற நேரத்தில் மனிதாபிமான முறையில் அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியார் பாசனத் திட்டத்திலே தற்போது பாசன நிலங்களுக்கு விவசாயம் செய்வதற்கு தண்ணீர் திறந்துவிடப்படுவதாக அறிகிறோம். ஆனால், ஏரிகளுக்கும், குளங்களுக்கும் தண்ணீர் விடுவதன் காரணமாக பாசன நிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை என்று புகார் அரசுக்கு வந்துள்ளதா ? ஆம் எனில், அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ? குளங்களுக்கும், ஏரிகளுக்கும் தண்ணீர் விடப்படுவதன் காரணமாக, அதிகாரிகள் அங்கே சில முறைகேடுகள் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று அந்தப் பகுதி விவசாய பெருமக்கள் அரசுக்கு செய்தி தெரிவித்திருப்பதால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குடிக்க நீர் இல்லை என்று சொன்ன காரணத்திற்காக அந்தப் பகுதியிலே சில குளங்களுக்கு தண்ணீர் விடப்படுவதாக தகவல் வந்ததாக என் நினைவிலே உள்ளது. அப்படி தண்ணீர் விடப்படுகின்ற நேரத்தில், அதிகாரிகள் தவறு செய்திருப்பதாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக்கொடுத்தால் நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலந்தூர் தொகுதி ஜாபர்கான் பேட்டையில் அடையாற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர்

70—(*வினா எண். 9722)—**திரு. ம. ஆபிரகாம் மற்றும் திரு. சைதை. சா. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் தொகுதியில் ஜாபர்கான் பேட்டை பகுதியில் மழைக் காலங்களில் அடையாறு ஆற்று நீரால் ஏற்படும் வெள்ளப் பெருக்கை கட்டுப் படுத்த ஆற்றின் இரு பகுதிகளிலும் சுவர் எழுப்ப அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். ஜாபர்கான்பேட்டை தாழ்பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை அடையாறு ஆற்றின் இடது கரையில் சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு மட்டும் சுவர் எழுப்பதிட்டமுள்ளது.

திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது. அதற்கு நன்றி கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த ஆண்டு இதுபோன்ற தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தால் மாடி வீடுகள் எல்லாம் மூழ்கடிக்கப்பட்டு ஒவ்வொருவரையும் படகிலே வீடுகளுக்கு அழைத்துச் சென்று, அப்புறப்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, இந்த ஆண்டாவது, மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற அந்த மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பு ஏற்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை வரவேற்கிறேன். அது உடனடியாக செயல்படுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. என். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்கு தற்போது தமிழக முதல்வர் அவர்கள் ரூ. 85 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.